THE SUDAR OLI
# சுடர் ஒளி
Registered as Newspaper
24.03.2020 செவ்வாய்க்கிழமை தொடர்புக்கு 077 361 5555



## தமிழ்–சிங்கள புத்தாண்டை கொண்டாட வேண்டாம்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24
எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டை கொண்டாட எண்ண வேண்டாம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரி

2



## ஊரடங்கு தளர்வு நேரத்தில் முண்டியடித்த மக்கள்!

யாழ்ப்பாணம் மார்ச் 24
வடக்கு மாகாணத்தில் இன்று காலை 6 மணி முதல் பி.ப. 2 மணி வரை ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதால், மக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி முண்டியடித்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதில் ஈடுபட்டனர். சில இடங்களில் தமக்கிடையே தூர இடைவெளியை மக்கள் பின்பற்றினர். எனினும் சந்தை, கடைகள் போன்றவற்றில் கொரோனா எச்சரிக்கையையும் பொருட்படுத்தாமல் பெரும் சனநெரிசல் மத்தியிலேயே மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2

## கொரோனா 101

கொழும்பு, மார்ச் 24
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 101 ஆக அதிகரித்துள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். இன்று காலை நால்வர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அதற்கமைய பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 97 இலிருந்து 101 ஆக உயர்ந்துள்ளது என்றும் அவர்

2

# சுவிஸிலிருந்து வந்த மதபோதகரை பாதுகாத்தது பொலிஸாரே!

### வடக்கு மாகாண ஆளுநர் பகீர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 24
அரியாலையில் இடம்பெற்ற ஆராதனைக் கூட்டத்தை நடத்திய சுவிஸிலிருந்து வந்த மதபோதகரை பொலிஸாரே பாதுகாத்தனர் என்று வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

2

## தாவடி – சுதுமலை வீதி போக்குவரத்துக்கு தடை

யாழ்ப்பாணம், மார்ச் 24
யாழ்ப்பாணத்தில் தாவடி - சுதுமலை வீதி இன்று காலையிலிருந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்றுக்கு உள்ளான ஒருவர் அந்தப் பகுதியில் வசித்து வந்திருந்தார். அதனையடுத்து அந்தப் பகுதி யில் கிருமித் தொற்று அகற்றும்

2

## மேல் மாகாணத்துக்கான ஆளுநர் நேற்று நியமனம்

கொழும்பு, மாரச் 24
மேல் மாகாண ஆளுநராக முன்னாள் விமானப் படைத் தளபதி மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ஷ முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். (ஐ)

## அத்தியாவசிய பொருள்கள் இனி வீடு தேடி வரும்

### ஆளுநர், மாவட்ட செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24
ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாலும் அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் இனி வீடு தேடி வரும். அத்துடன் அத்தியாவசியப் பொருள்களுக்கு யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடில்லை.


2

## எவ்வளவோ சொல்லியும் கேட்கிறார்கள் இல்லையே!

### ஆதங்கப்படுகிறார் ஆளுநர்

யாழ்ப்பாணம், மார்ச் 24
மக்களைக் கூட்டம் கூட வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்பதாக இல்லை. மக்கள் தாமாக உணர்ந்து சுய தனிமைப்படுத் தப்பட வேண்டும்.

2



## 6 மாதங்களின் பின்னரே தேர்தல் சாத்தியப்படும்

### நாடாளுமன்றைக் மீளக் கூட்டுமாறும் தமிழ்க் கூட்டமைப்பு கோருகின்றது

மட்டக்களப்பு, மார்ச் 24
இலங்கையில் தேர்தலை நடத்துவது அல்லது தேர்தலுக்கான ஆயத்தங்களைச் செய்வது பொருத்தமானதல்ல. தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை ஏற்பட குறைந்தது ஆறு மாதங்கள் ஆகும். எனவே தேர்தலை நீண்ட காலத்துக்கு ஒத்திப் போட முடியுமா? என்பதை தேர்தல்கள் ஆணைக்குழு

2

(தொடர்ச்சிகள்)

## ஊரங்கு....



### யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம், மார்ச் 24
ஊரடங்குச் சட்டம் இன்று காலை தளர்த்தப்பட்ட பின்னர், மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு யாழ்ப்பாணம் நகர் உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் மக்கள் கூட்டம் நெரிசலாகக் காணப்பட்டது. போக்குவரத்து நெரிசல் மற்றும் பொருள்கள் கொள்வனவு செய்ய முண்டியடிக்கும் மக்களைக் கட்டுப்படுத்தும் பணியில் பொலிஸார் ஈடுபட்டனர்.
நடைபாதை வியாபாரமும் களைகட்டியது. யாழ்ப்பாணம் நகர் பகுதியில் சற்று நெரிசலான நிலைமை காணப்பட்டது. பொருள்களைக் கொள்வனவு செய்ய வரிசையைக் கடைப்பிடிக்குமாறு பொலிஸார், சுகாதாரப் பிரிவினர் அறிவித்தல் விடுத்த நிலையில், சில இடங்களில் மட்டுமே மக்கள் வரிசையில் இடைவெளியைக் கடைப்பிடித்து பொருள்களைக் கொள்வனவு செய்தனர். (சு-7)

### முல்லைத்தீவில்....

முல்லைத்தீவு, மார்ச் 24
ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் நீராவிப்பிட்டி மற்றும் புதுக்குடியிருப்புப் பகுதிகளில் மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடித்தனர்.
சதொச விற்பனை நிலையத்தில் மக்கள் நெரிசலைத் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் பொலிஸார் மற்றும் படையினர், சிறப்பு அதிரப்படையினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில், அதிகளவானவர்கள் தங்கள் வாகனங்களுக்கு எரிபொருள்களை வரிசையில் நின்று நிரப்பிச் சென்றனர்.
மக்கள் நெரிசலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர். (சு-19)

### வவுனியாவில்....

வவுனியா, மார்ச் 24
கொரோனோ வைரஸ் தாக்கத்தால், வட மாகாணத்தில் நடைமுறையில் இருந்த ஊரடங்குச் சட்டம் இன்று தளர்த்தப்பட்டதை அடுத்து, வவுனியா நகர்ப்பகுதியில் மக்கள் அதிகளவில் வருகை தந்து பொருள்களைக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது.
நகர்ப்பகுதியில் பல்பொருள் விற்பனை நிலையம், மரக்கறி விற்பனை நிலையம் மற்றும் மருந்தகங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், மக்கள் நெரிசல் அதிகமாகக் காணப்பட்டது.
அதிகளவான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.
எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலை ஏற்பட்டது. எரிபொருள் நிரப்பும் வாகனங்களுக்குப் பொலிஸாரால் தொற்று நீக்கும் மருந்துகள் தெளிக்கப்பட்டன.
இதேவேளை வவுனியா நகருக்குள் பயணிக்கும் வாகனங்களுக்கு தெற்குத் தமிழ் பிரதேச சபையினரால் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முகக்கவசம் அணியாமல் பயணிப்பவர்களை பொலிஸார் எச்சரித்து வருகின்றனர். (சு-110)

### கிளிநொச்சியில்....

கிளிநொச்சி, மார்ச் 24
ஊரடங்கு உத்தரவு இன்று தளர்த்தப்பட்ட வேளை, கிளிநொச்சியில் அத்தியாவசியப் பொருள்களை பொதுமக்கள் கொள்வனவு செய்வதில் தீவிரமாக ஈடுப்பட்டனர்.
வங்கிகள், வியாபார நிலையங்கள் முன் அதிகளவான பொதுமக்கள் வரிசையில் இடைவெளிவிட்டு காத்திருந்து தேவைகளை நிறைவேற்றினர். 'மாஸ்க்' இல்லாது வரிசையில் நின்ற பொதுமக்களை பொலிஸார் திருப்பி அனுப்பிய சம்பவமும் இடம்பெற்றது. சதொச விற்பனை நிலையம், சந்தை, தனியார் விற்பனை நிலையம் என்பவற்றில் மக்கள் அதிகளவாகக் காணப்பட்டனர். (சு-214)



### சுவிஸிலிருந்து...

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று மதியம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
மார்ச் முதலாம் திகதிக்குப் பின்னர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களை பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்து, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தோம் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.
அப்படியானால் சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் பதிவுகளை மேற்கொள்ளாது எப்படித் தப்பித்தார் என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த ஆளுநர், பொலிஸாரே அவரை (சுவிஸிலிருந்து வந்த மதபோதகரை) பாதுகாத்தனர் என்று குறிப்பிட்டார்.
அவரை எப்படிப் பாதுகாத்தனர் என்று ஊடகவியலாளர் ஒருவர் மீளக் கேள்வி எழுப்பியபோது, அது விசாரணைகளின் பின்னர் தெரியவரும் என்று குறிப்பிட்டார்.
இதேவேளை, கொரோனா தொற்று தடுப்புத் தொடர்பில் முன்னாயத்த நடவடிக்கை மேற்கொண்ட வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளரை எச்சரிக்கை செய்த பொலிஸாருக்கு எதிராக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த ஆளுநர், ஜனாதிபதி செயலகத்துக்கு இது தொடர்பில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது, என்றார். (ஒ,5)

### தமிழ் – சிங்கள....

வித்துள்ளார்.
சிங்கள தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.
கொரோனா வைரஸ் பரவுவது முழுமையாக கட்டுப்படுத்தப்படாத நிலைமையில், புத்தாண்டை கொண்டாட தயாராக வேண்டாம் என்று முழு நாட்டு மக்களிடமும் கோரிக்கை விடுக்கின்றேன்.
பரவி வரும் வைரஸ் மேலும் சில மாதங்களுக்கு எந்த மட்டத்திலும் நாட்டில் இருக்க முடியும். இந்த நிலைமையை தவிர்ப்பது மக்களின் மிகப் பெரிய பொறுப்பு எனவும் அரசு வழங்கும் ஆலோசனைகளுக்கு அமைய தூர இடைவெளியை முடிந்தளவில் பேணவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,5)

### கொரோனா...

கூறினார். இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் இருவர் ஏற்கனவே குணமடைந்து தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர் என்றும் 97 பேர் மருத்துவமனைகளில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-22)

### தாவடி– சுதுமலை

வேலைத்திட்டம் சுகாதாரப் பிரிவினரால் நேற்று முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிலையில், யாழ்ப்பாணம் காங்கேசந்துறை வீதியூடாகத் தாவடிச் சந்தியிலிருந்து சுதுமலைக்குச் செல்லும் பாதையில் குறிப்பிட்ட பகுதி பொதுமக்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அந்தப் பகுதியிலிருந்து வெளியே செல்பவர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் விஷேட பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
நேற்றும் கிருமித்தொற்று நீக்கும் நடவடிக்கையின்போதும் எவரும் அந்த இடத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.
இந்த நிலையில், அந்த வீதி பொதுமக்கள் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (த-111)

### அத்தியாவசிய....

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் ஆகியோர் அறிவித்துள்ளனர்.
வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் என்பவற்றில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது.
மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு முண்டியடிக்கின்றார்கள். இதனால் கொரோனா பரவுவதற்கான அபாயம் இருக்கின்றது.
வர்த்தகத்துறையினருடன் இது தொடர்பில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. ஊரடங்குச் சட்ட நேரத்திலும் கொழும்புக்கு லொறிகளைக் கொண்டு சென்று பொருள்களை ஏற்றி வருவதற்கான அனுமதி அவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும். அதேபோன்று வீடு வீடாகப் பொருள்களை விநியோகிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவர்கள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி அதனை மேற்கொள்வார்கள்.
ஒவ்வொரு பிரதேச செயலர் ரீதியாக வீடு தேடி பொருள்களைக் கொண்டு வந்து விநியோகிக்கத் தயாராகவுள்ள வர்த்தகர்களின் தொலைபேசி இலக்கங்கள் மக்களுக்கு அறியத்தரப்படும். அத்துடன் மருந்துப் பொருள்களையும் அவ்வாறு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

### எவ்வளவோ...

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் தெரிவித்தார்.
வடக்கு மாகாண ஆளுநர் அலுவலத்தில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் சில இடங்களில் மக்கள் செறிவாக வாழ்கின்றனர். சில இடங்களில் மருத்துவ வசதிகள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. கொரோனா தொற்று வீரியமடைந்தால் மருத்துவ சேவையை விரிவாக்கிச் செல்வது சவாலானது. மக்கள் இதனை உணர்ந்து கொள்ளவேண்டும். மக்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்ளவேண்டும். மக்களுக்கு எவ்வளவு சொன்னாலும் வீதிகளில் நிற்கின்றார்கள். கூட்டமாகச் செல்கின்றார்கள். நாங்கள் கண்ணுக்குத் தெரியாத கிருமியுடன் போர் நடத்துகின்றோம். மக்கள் ஒத்துழைத்தால்தான் இதனைக் கட்டுப்படுத்த முடியும், என்றார். (ஒ,5)

### 6 மாதங்களுக்கு...

ஆலோசிப்பதோடு, சாத்தியமாகாத பட்சத்தில் தேர்தலை ரத்துச் செய்வதற்கான பரிந்துரை தொடர்பில் ஜனாதிபதியோடு பேசுவது பொருத்தமானது. இவ்வாறு, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கம் தெரிவித்தார். அவசர நிலையைக் கருத்திற் கொண்டு கலைத்த நாடாளுமன்றை மீளக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய நெருக்கடி நிலைமையில், கலைத்த நாடாளுமன்றத்தை மீள கூட்டலாம் என்பதற்கு அமைவாக ஜனாதிபதி உரிய சுகாதார நெறிவுறுத்தல்களுக்கு அமைய நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பது பொருத்தமானது. உலகப் போர்க்காலங்களில் இவ்வாறான நடைமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. எனவே நாடாளுமன்றை எஞ்சிய காலம்வரை நீடிக்கச் செய்து அதற்குப் பின் கலைத்து புதிய தேர்தலை நடத்துவதே பொருத்தமானதாக இருக்கும். மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பில் வெவ்வேறு விதத்தில் மன நிலை, உடல்நிலை, பொருளாதார நிலை என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.
எனவே இந்த விடயங்க ளைச் சீர்தூக்கி ஆராய்ந்து அன்றாடம் உழைத்துப் பிழைக்கின்ற மக்களுக்கு உட னடி நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்- என்று தெரிவித்தார். (த-150)

# நிதியைச் செலவிடும் அதிகாரம் ஜனாதிபதி கோத்தாவுக்கு இல்லை

## ரணில் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 24

ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் புதிய நாடாளு மன்றம் கூடும் வரை நிதியைச் செலவிடும் அதிகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வுக்கு இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற் கான நிதி ஒதுக்கீடுகளுக் காக நாடாளுமன்றத்தை மீளக் கூட்ட வேண்டியது அவசியம் எனவும் அவர்



குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

இடைக்கால கணக்க றிக்கை மூலம் ஏப்ரல் 30ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அன்று முதல் புதிய நாடா ளுமன்றம் கூடும் வரை எவ்வித நிதியையும் செல விடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை. புதிய நாடாளுமன்றத்தை எப்போது கூட்ட முடியும் என்பதைக் கூற முடி யாது. இது நெருக்கடி நிலை. பழைய நாடாளு மன்றத்தை மீளக் கூட்டி தேவையான நிதியைப் பெறுவதன் மூலமே இந்த நெருக்கடியைத் தவிர்க்க முடியும் - என்றார். (ஒ,5,22)





# ஊரடங்கு தளர்வு மக்கள் வரிசையில்

மன்னார், மார்ச் 24

மன்னார் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கி ழமை மாலை அமுல்படுத்தப்பட்ட பொலிஸ் ஊரடங்குச் சட்டம், சுமார் மூன்று நாள்க ளின் பின்னர் இன்று தளர்த்தப்பட்டது.

அதனையடுத்து காலை 6 மணிமுதல் மக்கள் தமது அத்தியாவசியப் பொருள்களைக் கொள் வனவு செய்ய முண்டியடித்துக் கொண்டனர்.

காலை 6 மணியளவில் மன்னார் சதொச விற்பனை நிலையத்துக்கு முன்னால் நூற்றுக்கணக்கான மக்கள் வரிசையில் நின்று பொருள்களைக் கொள்வனவு செய்தனர்.

பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறிப் பாக மன்னார் சந்தைப் பகுதிக்குள் வாகனங்க ளில் பயணிக்கப் பொலிஸார் தடை விதித்து நடந்து சென்று பொருள்களைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கினர். (க-56)



## ஊரடங்கு தளர்வு

# மாஸ்க் விற்பனை யாழில் அமோகம்



யாழ்ப்பாணம், மார்ச் 24

நாடுமுழுவதும் அரசால் அறிவிக்கப் பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று தளர்க்கப்பட்ட நிலையில், யாழ்ப் பாணத்தில் முகக் கவசங்களுக்கான (மாஸ்க்) மவுசும் எகிறியிருந்தது. யாழ்ப்பாணம் நகரப்பகுதி யில் அதனைக் கொள்வனவு செய்வதற்கு மக்கள் முண்டிய டித்தனர்.

உலக நாடுகளைப் பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியி ருந்த கொரோனா வைரஸ் தொற்று இலங்கையையும் பேரச்சமடைய வைத்தது. மூக்கு, மற்றும், வாய்ப் பகுதி யூடாகவே கொரோனா தொற்று பரவுகிறது என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்திருந்தது. எனவே முகக் கவசங்களைப் பயன்ப டுத்துமாறும் அந்த நிறுவனம் கேட்டுக்கொண்டது. இதற்கு அமைய இலங்கையில் முகக் கவசங்களுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது. மக்கள் அவற்றைக் கொள்வனவு செய்வதில் தீவிரமாகினர். சில நாள்களிலேயே முகக்கவசத்துக்குத் தட்டுப் பாடும் ஏற்பட்டிருந்தது.

கொனோரா தொற்றுநோயில் இருந்து மக்களைப் பாதுகாக் கும் நோக்கோடு இலங்கை அரசு கடந்த வெள்ளிக் கிழமை ஊரடங்குச் சட் டத்தைப் பிறப்பித்திருந்தது. அந்தச் சட்டம் நேற்று முந்தி னம் சில மாகாணங்களில் தளர்த்தப்பட்டாலும், யாழ்ப் பாணம் உட்பட்ட வடக்கி லும், ஏனைய சில மாவட் டங்களிலும் அமுலிலேயே இருந்தது. இன்று காலை வடக்கில் அந்த ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது. ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில், யாழ்ப்பாண நகரப்பகுதியில் அத்தியாவசி யப் பொருள்களைக் கொள் வனவு செய்வதற்கு மக்கள் முண்டியடித்தனர். மாஸ்க் வியாபாரிகள் அந்த மக்களைக் கவரும் வகையில் தயாரிக்கப் பட்ட மாஸ்க்கை மக்கள் குழுமும் இடங்களில் வைத்து விற்பனை செய்தனர். அவற் றைக் கொள்வனவு செய்வ தில் மக்கள் அதிக ஆர்வம் காட்டியிருந்தனர். மாஸ்க் கைக் கொள்வனவு செய்வதற் கும், அரசால் அறிவிக்கப் பட்ட ஒரு மீற்றர் இடை வெளியை மக்கள் கடைப்பி டித்தனர்.

இது தவிர யாழ்ப்பாண நகரப் பகுதியில், உள்ள தையல் நிலையங்கள் திறக்கப்பட்டு மாஸ்க் தைத்து வழங்கும் வேலைகளும் இடம்பெற்றி ருந்தன. தையல் நிலையங்களிலும் மாஸ்க் கைப் பெற்றுக்கொள்ள மக்கள் குழுமியிருந்ததை அவதானிக்க முடிந்தது. (எ-ப)

# மட்டு.விலில் தனிமைப்படுத்தப்பட்ட 238 பேர் குடும்பங்களுடன் இணைவு

யாழ்ப்பாணம், மார்ச் 24

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேசகத்தின் அடிப்படை யில், கொரோனாப் பரிசோத னைக்காக மட்டக்களப்பு, புனானை மற்றும் கந்தகாடு முகாம்களில் தனிமைப்படுத்தப் பட்டிருந்த 238 பேர் அவர்களு டைய குடும்பங்களுடன் இன்று இணைக்கப்பட்டனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கொரோனா தடுப்பு முகாம்களான புனானை மற்றும் கந்தகாடு ஆகிய முகாம்களில் கடந்த 14 நாள்களாக அவர்கள் தடுத்து வைக்கப்பட் டிருந்தனர். 14 நாள்க ளும் அவர்களுக்கான மருத்துவப்பரிசோத னைகள் இடம்பெற் றன. இதில் அவர்க ளுக்கு கொரோனா நோய்த்தொற்று இல்லை என்று கண்ட றியப்பட்டது.

அவர்களைக் குடுப்பங்களுடன் இணைக்கும் பணியை இரா ணுவத்தினர் இன்று மேற் கொண்டனர். புனானை முகா மில் இருந்து மாத்தறைப் பகு திக்கு இரண்டு பேருந்துகளில் 80 பேரும், கொழும்புக்கு இரண்டு பேருந்துகளில், 125 பேரும், கண்டிக்கு ஒரு பேருந் தில், 33 பேரும், இன்று அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும் கந்தக்காடுப் பகுதியிலிருந்து 108 பேர் இராணுவத்தால், பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (ப-150)



# கொரோனாவைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் தேடாதீர்கள்

## ரணிலுக்கு மஹிந்த பதிலடி

கொழும்பு, மார்ச் 24

கொரோனா வைரஸ் நிலைமையைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

புதிய நாடாளுமன்றம் கூடும் வரை நிதியைச் செலவிடும் அதிகாரம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அரச சேவைகளைப் பேணிச் செல்வதற்குத் தேவையான நிதியை ஒருங்கிணைந்த நிதியத்தின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான அதிகாரம் அரசமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, கொரோனா வைரஸ் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு அரசிடம் போதிய நிதி வசதி உள்ளதா என்பது தொடர்பில் மக்கள் அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. கொரோனா வைரஸ் நிலைமையைப் பயன்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசியல் இலாபம் தேட முயற்சிக்கின்றனர். புதிய அரசு நிதியைப் பெற்றுக்கொள்வதைத் தடுப்பதற்கு நல்லாட்சிக் குழுவினர் நாடாளுமன்றத்தில் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது. இந்த நிலையில், ஜனாதிபதியின் அதிகாரம் தொடர்பில் சட்டவாதங்களை முன்வைத்து நாட்டைச் செயலிழக்கச் செய்யும் முயற்சியைக் கண்டிக்கின்றேன் - என்றார். (ஒ,5,22)

# கோப்பாயில் 140 பேர் சுய கண்காணிப்பில்

ஏழாலை, மார்ச் 24

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் வெளிநாடுகளில் இருந்து வந்த 140 பேர் சுய கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு பின்பு வெளிநாடுகளில் இருந்து வந்த 140 பேரே இவ்வாறு கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ-39)



திருகோணமலை நகரப்பகுதியில் தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களால் பொதுமக்களுக்குக் கொரோனா வைரஸ் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வும், மாஸ்க்கும் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (ஐ-40)

# போதகரின் கூட்டத்துக்கு சென்றோர் தலைமறைவு?

## மன்னாரில் அவதானம் என்று சமூக நலன்விரும்பிகள் தெரிவிப்பு

மன்னார், மார்ச் 24

சுவிஸ் போதகரின் கூட்டத்துக்குச் சென்ற பலர் மன்னாரில் தலைமறைவாகியிருக்கின்றார்கள். அதுபற்றி அவதானம் செலுத்துமாறு சுகாதாரத் துறையினரை சமூக நலன்விரும்பிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆராதனைக் கூட்டம் நடத்திய சுவிஸ் போதகர் மற்றும் அவருடன் நெருங்கிப் பழகிய ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவருடைய ஆராதனைக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் என்ற சந்தேகத்தில் மடு மற்றும் நானாட்டான் பிரதேசங்களிலுள்ள இருபது குடும்பங்கள் அவர்களின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் கிராமப்புறங்களில் உள்ளவர்கள். ஒரு குடும்பத்துக்கும் பிற குடும்பங்களுக்கும் இடையில் ஏக்கர் கணக்கில் இடைவெளியைக் கொண்டு வாழ்பவர்கள். இவர்களை அடையாளம் கண்டு தனிமைப்படுத்தல் செயற்பாடுகளைச் செய்துள்ளமை மன்னார் சுகாதாரத் துறைக்கு வெற்றி என்றுதான் சொல்லவேண்டும்.

ஆனால் போதகர் சபைகளின் தலைமையகமாக மன்னார் நகரம் அமைந்துள்ளது. அங்கிருந்தே அதிகமானோர் சென்றிருக்க வாய்ப்பு உள்ளது. அவர்களில் ஒன்றிரண்டு குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என்று தகவல் கிடைத்த போதும் அவை உறுதிப்படுத்தப்படவில்லை. அத்துடன் மன்னார் நகரத்தில் மக்கள் மிகவும் இட நெருக்கடிக்குள் வாழ்பவர்கள். கொரோனா வைரஸ் எளிதில் தொற்றக்கூடியது.

எனவே சுவிஸ் போதகரின் ஆராதனைக்குச் சென்று வந்த பலர் மன்னார் நகர் பகுதிகளில் தலைமறைவாகி இருக்கக் கூடும் என்று சந்தேகம் நிலவுகிறது. அப்படிப்பட்டவர்களை மன்னார் பொலிஸாரும் பொதுச் சுகாதாரத் துறையினரும் இணைந்து கண்டறிந்து அவர்களையும் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்று சமூக நலன் விரும்பிகள் கேட்டுக்கொண்டுள்ளனர். (த-213)

# சுய கட்டுப்பாடு அவசியம்

## சீ.வீ.கே.சிவஞானம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 24



வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை இப்பொழுது ஒருவர் நோய்தொற்றுக்கு ஆளாகியுள்ளதுடன் பலர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. ஆனால் இங்கு தற்செயலாக இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டால் அதனைச் சமாளிக்க முடியாத நிலை ஏற்படும் என்ற அரச மருத்துவ சங்கத்தினரின் எச்சரிக்கை கவனத்தில் கொள்ளப்படவேண்டும். நாம் ஒவ்வொருவரும் நாமாகவே சுய கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு அறிவுரைகளை முறைப்படி பின்பற்றுதல் கட்டாயமானது. இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உயிர்க்கொல்லி நோயான 'கொவிட் 19' எனப்படும் கொரோனா தொற்றுநோய் இதுவரை உலகெங்கிலும் 15 ஆயிரத்து 433 உயிர்களைக் காவு கொண்டுள்ளது. சுமார் 3 லட்சத்து 54 ஆயிரத்து 804 பேர் இந்த நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகி உள்ளனர்.

அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட உலகின் எல்லா நாடுகளும் இத் தொற்று நோய் தாக்கத்தைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றன. பல்லாயிரக்கணக்கானவர்களை இந்தத் தொற்று நோய் காவு கொள்ளக்கூடும் என்ற எதிர்வு கூறல்கள் எல்லோரையும் அச்சமடையச் செய்கின்றது. எமது நாட்டிலும் இதுவரை 97 க்கும் மேற்பட்டோர் இவ் நோய் தொற்றுக்கு ஆளாகி உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

முறையான தடுப்பூசிகளோ, மருந்துகளோ இன்னும் காணப்படாத நிலையில் நாம் ஒவ்வொருவரும் அரச நிர்வாகத்தினராலும் மருத்துவத் துறையினராலும் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை கடைப்பிடித்தல் கட்டாயமாகின்றது.

ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பமும் அறிவுரையின்படி செயற்பட்டால் முழு நாடுமே இந்த ஆபத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ளப்படும். மருத்துவ நிபுணர்களும் அதிகாரிகளும் எவ்வளவுதான் அறிவுரைகளை வழங்கினாலும் அவற்றின் வெற்றி மக்கள் அவற்றைப் பின்பற்றுதலிலேயே தங்கியுள்ளது.

இன்றைய நிலையில் அலட்சியம் ஆபத்தானது என்பதை எல்லோரும் புரிந்து கொள்ளவேண்டும். போதுமான ஆலோசனைகளும் அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுவிட்டாயிற்று. அவற்றைப் பின்பற்றுவது மக்களது பொறுப்பாகும். பொறுப்போடு செயற்பட்டு எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டும் - என்றுள்ளது. (ஒ,5)

# சாவகச்சேரிச் சந்தைக்கு மாற்று இடங்கள் ஏற்பாடு

சாவகச்சேரி, மார்ச் 24

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டாலும், சாவகச்சேரி மரக்கறிச் சந்தை திறக்கப்படாது. அதற்காக மாற்று இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தபாற்கந்தோர் வீதியில் மகளிர் கல்லூரி முன்பாக, பெருங்குளம் சந்தி, கச்சாய் வீதியில் வீரபத்திரர் கோவிலடி மற்றும் முருகமூர்த்தி கோவிலடி, டச்சு வீதியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை முன்பாக நுணாவில் சர்வசாதனா ச.ச.நிலையம் மற்றும் விமலா இரும்பகம் முன்பாக உள்ள 6 கால் மடத்தடி, மீசாலைச் சந்தி, நுணாவில் மேற்கு துர்க்கை அம்மன் கோவிலடி ஆகிய இடங்கள் மரக்கறி விற்பனைக்குரிய இடங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் இனிவரும் காலங்களில் இந்த இடங்களுக்குச் சென்று மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய முடியும். வியாபாரிகள் கிராமம் கிராமமாகவும், விரும்பிய இடங்களிலும், ஊரடங்கு நேரத்திலும் நடமாடும் சேவை மூலம் மரக்கறிகளை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க-159)

# கட்டியது நான் திறப்பது அவரா?





கம்பஹா யாகொடவில் அமைக்கப்பட்ட வைத்திய நிலையம் ஒன்றை அண்மையில் திறந்து வைத்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

அந்த நிலையத்துக்கு நிதி ஒதுக்கியவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அவர் பிறந்த ஊரும் அதுதான்.

இதனால் அவரும் அதன் திறப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டார். அந்த நிகழ்வை ஒழுங்கு செய்தவர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க...

அவருக்கும் மைத்திரிக்கும் ஆகவே ஆகாது.மைத்திரியை கட்சியில் சேர்க்கக்கூடாது என்று பிரசாரம் செய்து திரிந்தவர் அவர். இப்போதும் அதே வேலையாகத் தான் திரிகிறார். மஹிந்தவின் அழுத்தத்தால்தான் மைத்திரியை நிகழ்வுக்கு அழைத்தார் பிரசன்ன.

நாடாவை வெட்டி அந்த நிலையத்தைத் திறப்பதற்கு அழைக்கப்பட்டார்கள் மஹிந்தவும் மைத்திரியும். இருவரும் போய் அங்கே நிற்கும்போது பிரசன்னவையும் கூப்பிட்டார் மஹிந்த.

"நீங்கதானே கம்பஹாவின் தலைவர். நீங்களும் வாங்க." என்றார்.

சுருங்கிவிட்டதாம் மைத்திரியின் முகம்."பணம் போட்டுக் கட்டுறது நான். திறக்கிறது அவரா?" என்பதே மைத்திரியின் ஆதங்கம்.

கூலா இருந்த மைத்திரியை இப்படிக் கடுப்பாக்கிவிட்டாரே மஹிந்த என்று பேசிக்கொண்டார்கள் அங்கே கூடி இருந்தவர்கள்.




# புத்தளம் மாவட்டத்தில் கட்டுக்குள் வந்தது கொரோனா தொற்று

கொழும்பு, மார்ச் 24

"புத்தளம் மாவட்டத்தில் கொரோனா தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. குருநாகல் மாவட்டத்தையும் முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மேற்கொள்ள அரசு தயாராக இருக்கின்றது" என்று வடமேல் மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் தெரிவித்தார்.

சதொசவின் மூலம் உணவுப் பொருள்கள் விநியோகிப்பது போன்று கூட்டுறவுச் சங்கக் கடைகளின் மூலமாகவும் அத்தியாவசியப் பொருள்களை நடமாடும் சேவை மூலமாக கிராமங்களுக்கும் வீடுகளுக்கும் கொண்டு சென்று விநியோகிக்க நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (த)

# கொரோனாவைக் கட்டுப்படுத்த கோத்தாவால் விசேட நிதியம்

கொழும்பு, மார்ச் 24

கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதைக் கட்டுப்படுத்தல் மற்றும் அதனுடன் இணைந்த சமூக நலன்பேணல் நடவடிக்கைகளை இலகுபடுத்தும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நிதியமொன்றை நிறுவியுள்ளார்.

அந்த நிதியம் 'கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியம்' எனப் பெயரிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி நிதியம் அதற்காக 100 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையில் தனியான கணக்கொன்று இதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்கு இலக்கம் 85737373 ஆகும்.

தேசிய, சர்வதேச நன்கொடையாளர்கள் சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்துக்குப் பணம் மூலம் பங்களிக்க முடியும். சட்டபூர்வமான கணக்கின் மூலம் நிதியத்துக்குச் செய்யப்படும் அன்பளிப்புகள் வரி மற்றும் வெளிநாட்டு நாணய சட்டதிட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். காசோலை, டெலிகிராப் ஊடாக நிதியை வைப்பிலிட முடியும்.

சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள், நிதி மற்றும் வங்கித் துறையின் உயர் திறன்களுடன் தொழில்வல்லுநர்களைக் கொண்ட பணிக்குழாம் ஒன்றின் மூலம் மேற்கொள்ளப்படும்.

அமைச்சுக்களின் செயலர்கள், சுகாதாரப் பணிப்பாளர் நாயகம், கணக்காய்வு நிபுணர்கள் மற்றும் வங்கித் தலைவர்கள் முகாமைத்துவ சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாடு முகம்கொடுத்துள்ள தற்போதைய சவால்களுக்கு மத்தியில் மனிதாபிமான உணர்வுடனும் சகோதரத்துவத்துடனும் அதனுடன் இணைந்து செயற்படுமாறு ஜனாதிபதி கேட்டுக்கொண்டுள்ளார்.

தேசிய, சர்வதேச நிறுவனங்களும் நிதியத்துக்குப் பங்களிப்பதன் மூலம் சுகாதார, சமூகப் பாதுகாப்பை வலுப்படுத்த பங்காளர்களாவதற்கும் மனிதாபிமான பணியின் மூலம் அனைத்து பிரஜைகளையும் கவனிக்கவும் கிடைத்த சந்தர்ப்பமாகும் என்று ஜனாதிபதியின் செயலர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தர நம்பிக்கை தெரிவித்தார். வெளிநாட்டு அரசுகள், சர்வதேச நிதி நிறுவனங்கள், இலங்கையின் முன்னணி தேசிய, சர்வதேச கம்பனிகள் இதில் முக்கிய பங்கை எடுத்துக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2004ஆம் ஆண்டு ஆழிப்பேரலை இடரின் போதும் 2009ஆம் ஆண்டு மனிதாபிமான நடவடிக்கையின்போதும் எமது நாட்டில் அனைத்து மக்களும் எழுந்திருந்தது இவ்வாறேயாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ,5,22)

# அரியாலை தேவாலய சம்பவமே வடக்கில் ஊரடங்குக்கு காரணம்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

பொதுமக்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்காகவும் யாழ். குடா நாட்டில் கொரோனா வைரஸ் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதனால் அவற்றிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகவும் அரசால் ஊரடங்குச் சட்டத்தை மீண்டும் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்த நேரிட்டதாக பாதுகாப்பு செயலர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

கடந்த மார்ச் 20 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிவித்த பாதுகாப்புச் செயலர், பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன வழங்கியுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுமாறும் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுத்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு முன்கூட்டிய நடவடிக்கையாகவே ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் வைரஸ் பரவும் அபாயத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய கட்டத்திற்குக் குறைக்கும் வரை பாதுகாப்பு அமைச்சால் மீண்டும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படும் எனவும் இவ் வேளையில் மக்கள் தமது வீடுகளுக்குள் தரித்திருந்து அரசின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்குமாறும் பாதுகாப்புச் செயலர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். நாங்கள் நடமாட்டத்தை நிறுத்தி, நேரடித் தொடர்புகளைத் தவிர்க்காவிட்டால் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவது கடினம். பொலிஸ் ஊரடங்கு நடைமுறையில் உள்ளவேளையிலும் அத்தியாவசிய சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அரச அதிகாரிகள் தமது கடமைகளுக்கு சமூகமளிக்க சேவை அடையாள அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

யாழில் இடம்பெற்ற சம்பவத்தின் காரணமாகவே மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஊரடங்கு சட்டம் நீடிக்கப்பட்டுள்ளது. அந்த மாவட்டங்களில் உள்ள மக்களிடையே வைரஸ் பரவலைத் தடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டதால், முழு வடக்கு பிராந்தியத்திலும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் இந்த திடீர் முடிவை தாங்கள் எடுத்ததாகவும், ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளபோது பயணங்களைத் தவிர்த்து கொள்வதோடு, அனைவரும் தமது வீடுகளில் இருக்க வேண்டும்.

நாட்டில் வசிக்கும் 22 மில்லியன் மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸ் மற்றும் படையினர் கொரோனா வைரஸிலிருந்து பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பொதுமக்கள் பொறுப்புடன் செயல்படவில்லை என்றால், படையினர் மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் செய்யும் கடினமான பணிகள் பயனற்றதாக அமைந்து விடுவதோடு ஒட்டுமொத்த மக்களும் ஆபத்தை எதிர்நோக்க வேண்டி வரும்.

படையினரால் நிறுவப்பட்ட தனிமைப்படுத்தும் மையங்களில் 3 ஆயிரத்து 500 க்கும் மேற்பட்டோர் கண்காணிப்பில் உள்ளனர்.

இதற்கு மேலதிகமாக, நாங்கள் 19 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்களை அடையாளம் கண்டுள்ளோம், மேலும் அவர்களது வீடுகளில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு அவர்களுக்கு அறிவித்துள்ளோம். இந்த நபர்கள் வீட்டிலேயே தங்கி சுகாதார அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தல்களின் படி செயற்படுமாறு கேட்டுக் கொள்கிறேன்- என்றார். (ஓ,5)



## மன்னார் சாக்குச் சாமியாரின் உண்ணாவிரதம் நிறைவு

மன்னார், மார்ச் 24

நாட்டில் சமாதானம் ஏற்படவும், சாதி, மத, இன, மொழி பேதமின்றி மக்கள் ஒற்றுமையாக வாழவும், சுதந்திர தினமான கடந்த பெப்ரவரி, 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சாக்கு சாமியாரின் உண்ணாவிரதம் நிறைவுக்கு வந்தது.

சாக்கு சாமியார் என்று அழைக்கப்படும், கிறிஸ்தோப்பு கிறிஸ்ணன் டயஸ் என்கின்ற குருஜி நாட்டில் சமாதானம், ஏற்படவும், சாதி, மத, இன, மொழி பேதமின்றி மக்கள் ஒற்றுமையாக வாழ வும் சுதந்திர தினமான கடந்த பெப்ரவரி, 4 ஆம் திகதி உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தார். அவருடைய உண்ணாவிரதம், கடந்த ஞாயிற்றுக்கிழமை 50 நாள்களை எட்டிய நிலையில் அது நிறைவுக்கு வந்தது. மன்னார் பிரதான பாலம் வங்காலைச் சரணாலயச் சுற்று வட்டார காரியாலயத்துக்கு அருகாமையில் ஓலைக் குடிசை அமைத்து அவர் தவம் இருந்து உண்ணா விரதத்தை ஆரம்பித்தார்.

உண்ணாவிரதத்தை நிறைவு செய்யும் நிகழ்வு மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவல் பெர்னான்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கண்ணண் குருக்கள், மூர்வீதி ஜும்மா பள்ளி மௌலவி எஸ்.அசீம், மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எஸ்.குணபாலன், மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.செல்வக்குமரன் டிலான் ,உற்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது மானுவல் பெர்னான்டோ ஆண்டகை நீர் ஆகாரத்தை வழங்கி உண்ணாவிரதத்தை நிறைவுக்குக் கொண்டு வந்தார். (ப-213)

## அரசின் இறுதி எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 24

வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பி, கொரோனா வைரஸ் தொற்று சோதனைக்கு உட்படாமல் தலைமறைவாகியோருக்கு அரசு இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு 12 மணிக்குள் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது மருத்துவமனையில் அவர்களைப் பதிவு செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வாறு பதிவு செய்யாமல் இருப்போர் தொற்று நோய் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்படுபவர்கள் நிச்சயமாக 14 நாள்கள் கண்காணிப்பு நிலையங்களில் தங்கவைக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ,5)

## முல்லை மருத்துவமனைக்கு பாதுகாப்புப் பொருள்கள் !

முலலைத்தீவு,மார்ச் 24

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகத்தால் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு ஒரு தொகுதி தொற்று பாதுகாப்புப் பொருள்கள் இன்று வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மூக்கு கவசங்கள்,வைத்தியர்களுக்கான பாதுகாப்பு அங்கிகள் மற்றும் மூக்கு கவசங்களுக்கான மூலப்பொருள்கள் என்பன வழங்கப்பட்டன.

மாவட்ட மருத்துவமனை மருத்துவ அதிகாரி என்.நிலக்ஸனிடம் ஆலய நிர்வா கத்தால் இந்தப் பொருள்கள் இன்று கையளிக்கப்பட்டன. (ஐ-19)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 24.03.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.